**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 64/2020 |
| Name | : Jaya |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கிருஷ்ணாபுரம் ஜெ.ஜெ. நகரில் வசித்து வருகிறேன். காட்டு வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு கண்ணமாநாயக்கனுாரில் உள்ள ஒரு பெண்ணை என் மகன் திருமணம் செய்து கொண்டார். அதை பிரித்துவிட்டு விட்டார்கள். அதன் பின்பு நாகராஜ் நான் சேர்த்து வைக்கிறேன் பணம் ரூ.5000/- கொடுங்கள் என்று கேட்டார். நான் கொடுக்க முடியாது என்று சொன்னேன். அந்த சமயத்தில் ஒரு நாள் மாலை 06.00 மணிக்கு எனது மகன் பிரகாஷை நாகராஜ் மற்றும் இன்னொருவர் ரயில்வே ரோட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். நான் எனது மகனை அடித்துவிடுவார்கள் என்று பயந்து பின்னால் சென்றேன். நான் போய் பார்த்த போது நாகராஜ் கையில் இரும்பு ராடு வைத்து என் மகனை பணம் கொடுக்கிறிய இல்லையென்றால் அடித்து கொன்றுவிடுவேன் என்றும் தாயோழி மகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டிக்கொண்டிருந்தார்கள். நான் எனது மகனை பிரித்து கூட்டி வந்தேன். இரவு 09.00 மணி அளவில் எனது மகனின் அழைப்பேசியில் ஒருவர் அழைத்து எஸ்.ஐ பேசுகிறேன் என்றும் அடி வாங்க சாப்பிட்டு தெம்பாக இரு என்று

மிரட்டினார்கள். நான் காவல் நிலையம் வந்து கேட்ட போது வேறு யாரோ மிரட்டியது தெரிந்தது. மறு நாள் காலை 10 மணி முதல் 10.30 மணிக்குள் மடத்துக்குளம் காவல் நிலையம் வந்து புகார் மனு எனது தம்பி எழுதிக் கொடுத்து நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 64/2020 |
| Name | : Prakash |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கிருஷ்ணாபுரம் ஜெ.ஜெ. நகரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 எனது அம்மா. 21.06.2017 ம் தேதி நான் கண்ணமநாயக்கனுாரைச் சேர்ந்த பெண்ணை திருமணம் செய்தேன். பிரித்துவிட்டு விட்டார்கள். நாகராஜ் அந்த சமயத்தில் வந்து எங்கள் இருவரையும் சேர்த்து வைக்கிறேன் என்று ரூ.5000/- பணம் கேட்டார். நான் பணம் கொடுக்க மறுத்துவிட்டேன். அவர் சென்று விட்டார். 27.06.2017 ம் தேதி மாலை 06.00 - 06.30 மணி அளவில் எனக்கு போன் செய்து ரயில் கேட் அருகில் உன்னிடம் பேச வேண்டும் என்று சொன்னார். நான் ரயில்வே கேட் சென்றேன். அங்கு அவருடன் ஒருவர் இருந்தார். நான் முன்னால் சென்று கொண்டிருந்தேன். நாகராஜ் என்னை ஏண்டா கேனப்புண்ட பணம் கேட்ட தரமாட்டியா அவளோ தெனாவட்டா என்று கேட்டு என்னை அடித்தார். என் அம்மா வந்து கேட்ட போது அவரை கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். இரவு 09.00 மணிக்கு எதிரி ஒரு புது எண்ணில் இருந்து எனது அலைப்பேசிக்கு அழைத்து நல்லா சாப்பிட்டு தெம்பா இரு அடிவாங்குவதற்கு என்று மிரட்டினார். என் அம்மா காவல்

நிலையத்தில் வந்து விசாரித்த போது போலீசார் அழைக்கவில்லை என்று தெரிய வந்தது. என் மாமாவிடம் நடந்ததை சொன்னோம். 28.06.2017 ம் தேதி காலை 10.00 – 10.30 மணி அளவில் மடத்துக்குளம் காவல் நிலையம் வந்து எனது அம்மா புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்